முருகப்பெருமான் துணை

**மகான் சுந்தரானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.02.2024**, வெள்ளிக்கிழமை

1. அவதார ஞான யோகியே
அண்ணலே ஞான குருவே
அவனியில் மாற்றம் நிகழ்த்த
அவதாரம் புரிந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
வரங்களென சோபகிருது கலைதிங்கள்
வழங்குவேன் இருபானாற் திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 26 ம் நாள், 09.02.2024, வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் சுந்தரானந்தர் யானும்
வையகம் பாதுகாப்புற உரைப்பேன்
சோரமிலா ஞானப் படைகள்
செகத்தினை வழிநடத்த வேண்டி
4. வேண்டியே ஞான உபதேசம்
வேலவன் அம்சமாக வழிபாடாக
தொண்டர்கட்கு அருளும் அரங்கன்
தெய்வநெறிதனை உலகோர் ஏற்று
5. ஏற்று பின்பற்றி வர
ஏற்று தான தரும வழியை
ஆற்றல்பட வழி மொழிந்து மக்கள்
அகிலமெங்கிலும் பரப்பிவர
6. வருகவே காலமதும் முழுமைபட
வரமாக தருமபலமாக
பேருலகில் நிரம்பி மாற்றம்
பேராற்றலாக தருமராஜன் கையில்
7. கைதனில் தலைமை ஏற்றிட
கந்த வேலனே இறங்கிட
பூதலம் பாதுகாப்பை பெறும்
புண்ணிய ஆளுமையாக மாறும்

8. மாறுதலை செய்யும் விதமாக
மக்களை காத்தருளும் ஞானி
ஆறுமுக அரங்க மகானே
அகிலம் தனில் சிறந்த ஞானி

9. ஞானியர் வழிதனை ஏற்று
ஞானிகளின் பூசை செய்து
ஞானியர் வழிவழி வருகின்ற
நமனை வெல்லும் சைவநெறி

10. சைவநெறிவழி ஜீவதயவுடன்
சாற்றிட சகலரும் சரணாகதி
அவனியில் அரங்கன் வழிபற்ற
அனைவருக்கும் ஞானி ஆகும் வாய்ப்பு

11. வாய்ப்புக் கூடி சிறந்துமே
வையகம் தனை காக்கும்
மெய்ஞானப் படைகளாகியே
மண்ணுலகில் மாற்றம் புரிவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–